07.09.2023
O.S.No.279/2019

வா. சா. 1 ஜனார்த்தனன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

18 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

சர்வே எண்.574/2 ன் மொத்த விஸ்தீரணம் 86 செண்ட். இந்த 86 செண்ட் நிலம் ஆதியில் ராமசாமி நாயுடு மற்றும் நாகம நாயுடு பேரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் ராமசாமி நாயுடு. என் தகப்பனார் 86 செண்ட் கிரையம் பெற்று அவரது அனுபவத்தில் இருந்தது என்பதை காட்ட கிரைய பத்திரம் தவிர வேறு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் ராமசாமி நாயுடு பெருமாள் மாதாரி என்பவருக்கு வாதசாஆ.4 ன்படி 56 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். வாதசாஆ.4 ல் 86 செண்டில் 56 செண்டை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லவில்லை என்றாலும் ஜாயிண்ட் 56 செண்டை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படியிருந்தால் மீதி 30 செண்ட் யாருக்கு ஜாயிண்ட் என்றால் என் அப்பாவுக்குத்தான் பாத்தியப்பட்டது. பெருமாள் மாதாரி இறந்த பின்னர் அவரது வாரிசுகள் 56 செண்டை கந்தசாமி என்பவருக்கு 21.7.1973 ம் தேதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். ச.எண்.574/2 ல் கண்ட 30 செண்ட் சொத்து கொண்டல்சாமி நாயுடு மற்றும் அவரது மனைவி காவேரியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் அவர்களுக்கும் இந்த சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. 30.7.1934 கிரையப்பத்திரப்படி அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அவர்கள் இறந்த பிறகு அந்த சொத்துக்களை அவரது மகன்களான பெத்து நாயுடு மற்றும் சுப்பா நாயுடு ஆகியோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பெத்து நாயுடு இறந்த பின்னர் அவரது வாரிசுகள் 29.01.1985 ம் தேதி தங்களுக்கு

பாத்தியப்பட்ட பாதி சொத்துக்களைப் பொறுத்து சுப்பா நாயுடுக்கு பொது அதிகாரம் வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். கந்தசாமி கிரையம் பெற்ற 56 செண்ட் நிலம், சுப்பா நாயுடு வசம் இருந்த 30 செண்ட் ஆகிய இரண்டு நிலங்களையும் ஒன்றாக சேர்த்து 27.12.1984 ம் தேதி திண்டுக்கல் பஞ்சாயத்து கமிசனர் அவர்களிடம் அனுமதி பெற்று இ.பி. காலனி என பெயரிட்டு சொத்துக்களை பிளாட்டுகளாக பிரித்து கிரையம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். 86 செண்டில் உள்ள அனைத்து பிளாட்டுகளையும் விற்பனை செய்து விட்டார்கள் என்றால் சரிதான். அனைத்து பிளாட்டிலும் வீடு வந்துவிட்டது என்றால் சரிதான். 1985 ல் இருந்த கிரையம் செய்து வரும் நிலையில் 2019 ம் வருடம் இவ்வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்ததற்கு என்ன காரணம் என்றால் ஆவணங்கள் கிடைப்பதற்கு காலதாமதமானது. 18 ம் பிரதிவாதி 13.2.1985 ம் தேதி பிளாட் எண்.4 ஐ கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அவர் தனது மகன் சார்லசுக்கு 15.06.2006 ம் தேதி சொத்தை தானமாக கொடுத்து விட்டார் என்றால் தெரியாது. தற்போது செல்வராஜ் மகன் சார்லஸ் அந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் தெரியாது. நான் தற்போது சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். கூட்டுச்சுவாதீனம் என்ற அடிப்படையில் நீதிமன்றக்கட்டணம் கட்டியுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் பெருமாள் மாதாரி கிரையம் பெற்ற 56 செண்டையும் என் தகப்பனார் வசம் இருந்த 30 செண்ட் நிலத்தையும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட வருவாய்த்துறை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெருமாள் மாதாரியிடமிருந்து சொத்தை கிரையம் பெற்ற கந்தசாமி நாயுடுவும் என் தகப்பனாரும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட வருவாய்த்துறை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் என்னுடைய பாகத்தை பிரித்து தரச்சொல்லி கேட்டேன் என்றும் அவர்கள் பிரித்து தருவதாக

சொல்லி காலம் கடத்தி வந்தார்கள் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளும் நானும் கூட்டுச்சேர்ந்து கொண்டு கிரையம் பெற்றவர்களிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பிரதிவாதிகள் பெற்ற கிரையத்தை ரத்து செய்யக்கோரி மனு செய்துள்ளதாக கூறுவதும் அது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. என் தகப்பனார் வழக்குச்சொத்தை கிரையம் பெற்ற தேதி முதல் ராமசாமி நாயுடு சொத்தை அனுபவித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1984 ம் வருடத்திலேயே சொத்துக்கள் பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு விற்கப்பட்டு விட்டது என்றும் அதனால் சொத்தின் அனுபவத்தில் இருந்து நான் வெளியேற்றப்பட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. காலம் கடந்து தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிளாட்டுக்களை கிரையம்பெற்ற கிரையதாரர்களின் கிரையம் செல்லாது என நான் பரிகாரம் கோராததாலும் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 18 ம் பிரதிவாதி அவரது சொத்தை அவரது மகனுக்கு தானம் எழுதிவிட்டதால் உரிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

19 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

சர்வே எண்.574/2 ன் மொத்த விஸ்தீரணம் 86 செண்ட். இந்த 86 செண்ட் நிலம் ஆதியில் ராமசாமி நாயுடு மற்றும் நாகம நாயுடு பேரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் ராமசாமி நாயுடு. என் தகப்பனார் 86 செண்ட் கிரையம் பெற்று அவரது அனுபவத்தில் இருந்தது என்பதை காட்ட கிரைய பத்திரம் தவிர வேறு எந்த ஒரு

ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் ராமசாமி நாயுடு பெருமாள் மாதாரி என்பவருக்கு வாதசாஆ.4 ன்படி 56 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். வாதசாஆ.4 ல் 86 செண்டில் 56 செண்டை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லவில்லை என்றாலும் ஜாயிண்ட் 56 செண்டை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படியிருந்தால் மீதி 30 செண்ட் யாருக்கு ஜாயிண்ட் என்றால் என் அப்பாவுக்குத்தான் பாத்தியப்பட்டது. பெருமாள் மாதாரி இறந்த பின்னர் அவரது வாரிசுகள் 56 செண்டை கந்தசாமி என்பவருக்கு 21.7.1973 ம் தேதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். ச.எண்.574/2 ல் கண்ட 30 செண்ட் சொத்து கொண்டல்சாமி நாயுடு மற்றும் அவரது மனைவி காவேரியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் அவர்களுக்கும் இந்த சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. 30.7.1934 கிரையப்பத்திரப்படி அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அவர்கள் இறந்த பிறகு அந்த சொத்துக்களை அவரது மகன்களான பெத்து நாயுடு மற்றும் சுப்பா நாயுடு ஆகியோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பெத்து நாயுடு இறந்த பின்னர் அவரது வாரிசுகள் 29.01.1985 ம் தேதி தங்களுக்கு பாத்தியப்பட்ட பாதி சொத்துக்களைப் பொறுத்து சுப்பா நாயுடுக்கு பொது அதிகாரம் வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். கந்தசாமி கிரையம் பெற்ற 56 செண்ட் நிலம், சுப்பா நாயுடு வசம் இருந்த 30 செண்ட் ஆகிய இரண்டு நிலங்களையும் ஒன்றாக சேர்த்து 27.12.1984 ம் தேதி திண்டுக்கல் பஞ்சாயத்து கமிசனர் அவர்களிடம் அனுமதி பெற்று இ.பி. காலனி என பெயரிட்டு சொத்துக்களை பிளாட்டுகளாக பிரித்து கிரையம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். 86 செண்டில் உள்ள அனைத்து பிளாட்டுகளையும் விற்பனை செய்து விட்டார்கள் என்றால் சரிதான். அனைத்து பிளாட்டிலும் வீடு வந்துவிட்டது என்றால் சரிதான். 1985 ல் இருந்த கிரையம் செய்து வரும் நிலையில் 2019 ம் வருடம் இவ்வழக்கை

காலதாமதமாக தாக்கல் செய்ததற்கு என்ன காரணம் என்றால் ஆவணங்கள் கிடைப்பதற்கு காலதாமதமானது. 19ம் பிரதிவாதி 13.2.1985ம் தேதி பிளாட் எண்.10 ஐ கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் தற்போது சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். கூட்டுச்சுவாதீனம் என்ற அடிப்படையில் நீதிமன்றக்கட்டணம் கட்டியுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் பெருமாள் மாதாரி கிரையம் பெற்ற 56 செண்டையும் என் தகப்பனார் வசம் இருந்த 30 செண்ட் நிலத்தையும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட வருவாய்த்துறை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெருமாள் மாதாரியிடமிருந்து சொத்தை கிரையம் பெற்ற கந்தசாமி நாயுடுவும் என் தகப்பனாரும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட வருவாய்த்துறை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் என்னுடைய பாகத்தை பிரித்து தரச்சொல்லி கேட்டேன் என்றும் அவர்கள் பிரித்து தருவதாக சொல்லி காலம் கடத்தி வந்தார்கள் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளும் நானும் கூட்டுச்சேர்ந்து கொண்டு கிரையம் பெற்றவர்களிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பிரதிவாதிகள் பெற்ற கிரையத்தை ரத்து செய்யக்கோரி மனு செய்துள்ளதாக கூறுவதும் அது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. என் தகப்பனார் வழக்குச்சொத்தை கிரையம் பெற்ற தேதி முதல் ராமசாமி நாயுடு சொத்தை அனுபவித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1984ம் வருடத்திலேயே சொத்துக்கள் பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு விற்கப்பட்டு விட்டது என்றும் அதனால் சொத்தின் அனுபவத்தில் இருந்து நான் வெளியேற்றப்பட்டுவிட்டேன் என்றால்

சரியல்ல. காலம் கடந்து தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிளாட்டுக்களை கிரையம்பெற்ற கிரையதாரர்களின் கிரையம் செல்லாது என நான் பரிகாரம் கோராததாலும் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2023.09.07 18:01:33 +0530

Principal District Judge,
Dindigul.